REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை: சித்திரை 10உ திங்கள் (22—4—57) ★ ★ வெளியூர்: சித்திரை 11உ செவ்வாய் (23—4—57) [இதழ் 269

'அநீதி—ஒழுங்கற்றது—எதேச்சாதிகாரமானது'

தி.மு. கழகத் தோழர்களைத் தாக்கினர்

அரிவாளால் வெட்டினர்; கொடிய ஆயுதங்களால் குத்தினர்!

மதுரையில் மீண்டும் கம்யூனிஸ்டு வெறிச்செயல்

19—4—57 இரவு ஆர்வி பஞ்சாலையில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பிய பிச்சைபிள்ளை சாவடி தி. மு. கழகத் தோழர்கள் சௌந்திரபாண்டியன், குருசாமி இருவரையும் கம்யூனிஸ்டுகள் வழிமறித்துத் தாக்கியும், கொடிய ஆயுதங்களால் குத்தியும், அரிவாளால் வெட்டியும் படுகாயமுண்டாக்கிவிட்டார்கள்.

தோழர்களில் ஒருவருக்கு கையில் குத்துக்காயமும், மற்றொருவருக்கு கையெலும்பு முறிந்தும் படுகாயமுற்று, தற்பொழுது மருத்துவமனையில் மருந்து கட்டிக் கொண்டு வருகிறார்கள்.

மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் காயமடைந்த தோழர்களின் இல்லம் சென்று ஆறுதல் கூறி வருவதோடு, போலீஸ் அதிகாரிகளைக் கண்டு தக்க நடவடிக்கை எடுக்குமாறு கூறியும், கழகத் தோழர்களை அமைதியாக இருக்குமாறும் கேட்டுக்கொண்டிருக்கிறார். (ந-நி.)

மாயூரம் தொகுதி தேர்தல் வழக்கு

20—4—57-ம் நாளன்று மாயூரம் தொகுதி தேர்தல் வழக்கு மனுவை, தோழர் குடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி அவர்களால், டில்லி தேர்தல் ஆணையாளரிடம் அஞ்சல் மூலம் தாக்கல் செய்யப்பட்டது.

★

வண்ணை தொகுதி தேர்தல் வழக்கு

20—4—57-ம் நாளன்று சென்னை-வண்ணைத் தொகுதி தேர்தல் வழக்கு மனுவை, தோழர் என். சீவரத்தினம் அவர்களால் டில்லி தேர்தல் ஆணையாளரிடம் அஞ்சல் மூலம் தாக்கல் செய்யப்பட்டது.

'விவசாயத்தை நம்பி மட்டுமே வாழ முடியாது'

'இறக்குமதி மட்டுமே செய்து ஏற்றுமதி செய்யாதிருப்பதா?'

'கனரகத் தொழில் வேண்டும்—துணைத் தொழில்களும் நிறுவப்பட வேண்டும்'

டெல்லிப் போக்கிற்கு உ. பி. முதலமைச்சர் கண்டனம்

லக்னோ, ஏப். 18—

"தங்களுக்குத் தேவையான பயன்படு பொருள்கள் அனைத்தையும் விவசாயத்தின் மூலம் மட்டுமே மக்களால் அடைய முடியாது. ஏற்றுமதி எதுவும் செய்யாது இறக்குமதி செய்துகொண்டுவருமானால், வெறும் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்துவரும் வட்டாரமான உத்திரப் பிரதேசம் என்றென்றும் பின்தங்கிக்கிடக்க வேண்டியதுதான். உத்திரப் பிரதேசத்தின் பொருளாதாரத்தை வளப்படுத்த வேண்டுமானால், துணைத் தொழில்களை நிறுவுவதற்கு வாய்ப்பளிக்கக்கூடிய கனரகத் தொழில்களை நிர்மாணித்தாக வேண்டும்"

இவ்வாறு, உத்திரப் பிரதேச சட்டசபையில், முதலமைச்சர் டாக்டர் சம்பூர்ணானந்தர் அறிவித்துள்ளார்.

கவர்னரின் சட்டசபைத்துவக்க விழா சொற்பொழிவின்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதில் கூறும் நேரத்தில், உத்திரப் பிரதேசத்தில் கனரகத் தொழில்களைத் துவங்க மத்திய அரசு மறுத்துள்ளதை வன்மையாகக் கண்டித்து, முதலமைச்சர் பேசியுள்ளார்.

தொழில் மயக் கோரிக்கை உத்திரப் பிரதேசத்தின் வாழ்வு - தாழ்வு பிரச்சினையாகும் என்றும், பொருளாதாரத் துறையில் தம் மாநிலம் அழிவு எல்லையை அடைந்துவிட்டிருக்கின்றது என்றும், நில இருப்பின் காரணமாக விவசாயம் வரையறையின்றி வளர்ச்சி பெறுவது இயலாது என்றும், கனரகத் தொழில்களைத் துவங்க வேண்டும் என்ற கோரிக்கையை ஒருமனதாக அனைவரும் ஆதரிக்கவேண்டும் என்றும் முதலமைச்சர் டாக்டர் சம்பூர்ணானந்தர், சட்டசபைப் பேச்சில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய எஞ்சினியர்கட்கு உருக்குத் தொழில் பயிற்சி

15 இலட்சம் டாலர் அளிக்க போர்டு நிறுவனம் முன்வருகிறது

புதுடில்லி, ஏப். 22—

இந்திய இரும்பு—உருக்கு எஞ்சினியர்களுக்கு உற்பத்தி முறைகளிலும், தொழில் நிர்வாக முறைகளிலும் போதிய பயிற்சியளிக்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

வரும் செப்டம்பரில் 115 பேர்களுக்கும், அக்டோபரில் 85 பேர்களுக்கும் அமெரிக்காவில் ஓராண்டுக்காலம் பயிற்சி அளிக்கப்படும்.

பயிற்சி முடிந்து அவர்கள் இந்தியா திரும்பியவுடன் ரூர்கேலா, பிலாய், துர்காபூர் முதலிய இடங்களிலுள்ள உருக்கு ஆலைகளில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள்.

இதற்கான செலவை அமெரிக்க போர்டு நிறுவனம் ஏற்றுக் கொண்டு, இதற்கென 15 இலட்சம் டாலர் ஒதுக்கியுள்ளதாம்.

ஏற்கனவே பல இந்தியர்கள் மேற்கு ஜெர்மனியில் பொறியியல் பயிற்சி பெற்றுவருகின்றனர்.

மற்றும் பலர் ரஷ்யா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பயிற்சி பெறுவார்கள்.

ஒரு நேச நாட்டை தொழில் மயமாக்குவதில் இந்த நாடுகள் அக்கரை கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

'தமிழ் நாட்டு உழைப்பின் 'விசை' டில்லியிலா இருப்பது?'

'விசித்திரமான இந்நிலையிலிருந்து தமிழகம் விடுதலை பெறவேண்டும்'

வினோபா பாவேயின் உணர்வு முழக்கம்

நாகர்கோவில், ஏப். 22—

"தமிழக மக்கள் உழைப்பின் 'விசை' டில்லியில் (மத்திய ஆட்சியில்) இருப்பது விசித்திரமாக இருக்கிறது; அச்சுமையிலிருந்து தமிழகம் விடுதலை பெறவேண்டும்"

என்று, நிலக்கொடை இயக்கத் தலைவர் வினோபா பாவே கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

உத்திரப் பிரதேசத்தில் வைரப் படிவங்கள்!

ஆற்று மணலில் தங்கம்?

லக்னோ, ஏப். 22—

உத்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ள பண்டா மாவட்டத்தைச் சேர்ந்த கார்வீ பகுதியில் விலை உயர்ந்த வைரக் கல் படிவங்கள் இருக்கிறதாம்!

இந்த மாநிலத்தின் ஆற்று மண்ணில், தங்கம் கிடைப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது.

வேற்றுமை காட்டி தடுத்து நிறுத்தினர்!

அபராதம் அல்லது சிறைவாசத் தண்டனை விதிக்கப்பட்டனர்

வாரணசி, ஏப். 22—

காசி விசுவநாதர் ஆலயத்தில் நுழைய முயன்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 7 பேர்களை, அவர்கள் அனைவரும் தீண்டப்படாதவர்கள் என்றுகூறி 24 பேர் அவர்களைத் தடுத்து நிறுத்தினராம்!

பாகுபாடு காட்டும் முறையில் நடந்துகொண்ட 24 பேர்கள் மீதும் வழக்குத் தொடரப்பட்டதில் அவர்களுக்கு தலா ரூ. 50 அபராதம்—தவறினால் 15 நாள் சிறைவாசத் தண்டனை விதித்து மாஜிஸ்திரேட் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் புதிய தொழில் நிறுவனம்

மத்திய சர்க்கார் அனுமதி

இரசாயனப் பொருள் தயாரிக்கத் திட்டமாம்

சென்னை, ஏப். 19—

திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தில், 'சாந்தா செமிகல்ஸ் லிமிடெட்' என்ற பெயரில் ஒரு தொழில் நிறுவனத்தை ஏற்படுத்துவதற்கு இந்தியப் பேரரசு 'லைசென்சு' வழங்கியிருக்கிறதாம்.

'பொட்டாசியம் குளோரேட்' என்ற இரசாயனப் பொருள் இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுமாம்.

உறையூரில் நெசவாளர் மறியல்

கூலியைக் குறைத்ததற்கு எதிர்ப்பு

திருச்சி, ஏப். 22—

திருச்சி உறையூரில் நெசவாளர்களின் கூலியை மாஸ்டர்வீவர்கள் பாவு 1-க்கு 15—8—0 ஆக இருந்ததை ரூ.14-12-0ஆகக் குறைத்துவிட்டார்கள். கஞ்சிப் பாவுக்கு 2—4—0 கூலியாக இருந்தை 2—2—0-ஆகக் குறைத்துவிட்டார்கள்.

இது சம்பந்தமாக தோழர்கள் எம். கே. எம். அப்துல் சலாம் எம்.பி., எம். எஸ். மணி, எஸ். சுப்பரெத்தினம் ஆகியோர் 'மாஸ்டர் வீவர்'களைக் கண்டு பேசினர். 'மாஸ்டர் வீவர்'கள் ஒத்துவராததால், 19-4-57 காலை 9 மணிக்கு 'மாஸ்டர் வீவர்'களின் சங்கத் தலைவர் லிங்கையன் செட்டியார் வீட்டின்முன், திருச்சி மாவட்ட வள்ளுவர் கைத்தறி, பாவுத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் தோழர் ஏ. எம். வி. முத்துசாமி தலைமையில் 10 தோழர்கள் அமைதியாகக் கையில் தட்டிகளை ஏந்தி மறியல் செய்து வருகிறார்கள்.

பழைய கூலியைப் பெறும் வரையில் தொடர்ந்து மறியல் செய்துவருவார்கள் என உறையூர் தி. மு. கழகத் துணைச் செயலாளர் அறிவிக்கிறார்.

2-வது நாள் போராட்டம்

உறையூர் நெசவாளர் கூலி குறைப்பு சம்பந்தமாக தோழர் ஏ. எம். வி. முத்துசாமி அவர்கள் தலைமையில் 11 தொண்டர்கள், முதலாளிகள் சங்கத் தலைவர் ஏ. எஸ். லிங்கையன் செட்டியார் கடையின்முன் மறியல் செய்து வருகின்றனர். பல தொழிற் சங்கங்களும், பொதுமக்களும் மறியல் செய்யும் இடத்திற்கு வந்து ஆதரவு தெரிவிக்கின்றனர். (ந. நி.)

தென் சுமத்திரா சுயாட்சி கோரும்

ஜகார்தா, ஏப். 19—

இந்தோனேஷியாவைச் சேர்ந்த தென் சுமத்திராவில் கடந்த திங்களில் மத்திய அரசாங்கத்திற்கு விரோதமாகப் புரட்சி நடைபெற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை சுமுகமாகத் தீர்த்துவைக்க தென் சுமத்திராவிலிருந்து ஒரு தூதுக்குழு சுகர்னோவுடனும், புதிய பிரதமருடனும் கலந்து பேச ஜகார்தாவுக்குச் சென்றுள்ளதாம்.

இந்த தூதுக்குழு மேற்கொண்டுள்ள முக்கியப் பணி, தென் சுமத்திராவுக்கு சுயாட்சி உரிமை பெறுவதேயாகும் என்று தெரியவருகிறது.

காபூலில் விமான நிலையம் நிறுவ ரஷ்யா உதவி

லண்டன், ஏப். 22—

ஆப்கனிஸ்தானைச் சேர்ந்த காபூலில் ஒரு விமான நிலையம் கட்ட ஏற்பாடாகியுள்ளது. இதற்குத் தேவையான சாமான்களையும், மற்ற உதவிகளையும் கடனுதவியாக ஆப்கனிஸ்தானுக்கு ரஷ்யா அளிக்குமாம்.

இலண்டனில் தமிழ் புத்தாண்டு விழா

இலண்டன், ஏப். 19—

இலண்டனில் வாழும் தமிழர்கள் தமிழ்ப் புத்தாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடியுள்ளனர்.

இந்தியா, இலங்கை, நியாசா, தென்னாப்பிரிக்கா, பர்மா முதலிய நாடுகளைச் சேர்ந்த தமிழர்கள் ஒன்றுகூடி விருந்தருந்தி இசை—நடன—நாடக நிகழ்ச்சிகளைக் கோலாகலமாகக் கொண்டாடினர்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 22—4—57 திங்கள்

வீண் பகட்டு! தண்டச் செலவு!

மக்கள் சபையில், குறிப்பிட்ட விஷயங்களின்மீது, உறுப்பினர்களிடை வாக்கெடுப்பது வழக்கம். அவ்வாறு வாக்கெடுப்பதில், தங்களுடைய இருப்பிடத்தைவிட்டு வாக்குப் பதிவு செய்யும் இடத்திற்கு உறுப்பினர்கள் சென்றுவர வேண்டியதாக இருந்துவருகிறது. அவ்வாறு வாக்குப் பதிவு செய்வதற்காக, ஒவ்வொரு வாக்குப் பதிவின்போதும் 15 அல்லது 20 நிமிடங்களை மக்கள் சபை உறுப்பினர்கள் செலவழித்து வருகின்றனர்.

ஒவ்வொரு வாக்கெடுப்பின்போதும், தங்கள் இருப்புகளை விட்டு எழுந்து செல்லாமல் உட்கார்ந்திருக்கும் இடத்திலிருந்தே வாக்களிப்பதற்கான ஒரு இயந்திர ஏற்பாடு, மக்கள் சபையில் அமைக்கப்பட்டு இருக்கிறது. அப்புது வாக்கெடுப்பு முறையின் காரணமாக, இனி உறுப்பினர்கள் இடம் பெயர்ந்து செல்லத் தேவையே இல்லை. அதற்காகச் செலவழித்துவந்த கால அளவும் மீதஞ் செய்யப்படுகிறது.

ஒவ்வொரு உறுப்பினரும் உட்கார்ந்து இருக்கும் இடத்திற்கு முன் மூன்று பொத்தான்கள் அமைக்கப்பட்டு இருக்கும். அம்மூன்று பொத்தானில் ஒன்றை அழுத்தினால் சிவப்பு ஒளி தெரியும்; அது உறுப்பினரின் எதிர்ப்பை உணர்த்துவதாகும். மற்றொரு பொத்தானை அழுத்தினால் பச்சை ஒளி தெரியும்; அது உறுப்பினரின் உடன்பாட்டை அறிவிப்பதாகும். மற்றொரு பொத்தானை அழுத்தினால் வெள்ளை ஒளி தெரியும்; அது, உறுப்பினரின் நடுநிலைப் போக்கை வெளிப்படுத்தும். இவ்வாறு மூவகை ஒளி மூலம் ஒப்புதல்—எதிர்ப்பு—நடுநிலை ஆகிய மூன்று நிலையையும் தனித்தனியாகக் கூட்டி, ஒவ்வொன்றின் மொத்த எண்ணிக்கையையும் பதிவு செய்துகாட்டவும் காட்டும் அந்த இயந்திரம்.

அந்த இயந்திரத்தின் விலை ரூபாய் நான்கு இலட்சம். மக்கள் சபையில் ஒரு இயந்திரமும் மேல் சபையில் ஒரு இயந்திரமும் ஆக இரண்டு இயந்திரங்கள் மொத்தத்தில் ரூபாய் எட்டு இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

இயந்திரம் மேற்கு ஜெர்மனியில் செய்யப்பட்டவை. அந்த இயந்திரம் பதினைந்தாண்டுக் காலத்திற்கு மேலாக இயங்கக் கூடும் என, அதன் உற்பத்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

ஆண்டு ஒன்றுக்கு மக்கள் சபையில் ஏறத்தாழ இருபது வாக்கெடுப்புகளுக்கு மேல் நடைபெறுவது கிடையாது. இந்த இயந்திர அமைப்புக்கு முன் ஒரு வாக்கெடுப்பிற்கு 1,200 ரூபாய் விதம் செலவாகி வந்தது. இயந்திர ஏற்பாட்டின் காரணமாக அச்செலவு வாக்கெடுப்பு ஒன்றுக்கு ரூ. 350 விதம் குறைய வழியிறக்கும்.

இத்தகு இயந்திரம் இப்பொழுதுதான் மக்கள் சபையிலும் மேல் சபையிலும் அமைக்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் வங்காள சட்டசபையில் ஏற்கனவே இதுபோன்ற இயந்திரம் அமைக்கப்பட்டு இருக்கிறது.

ஆண்டு ஒன்றுக்கு இருபது முறை மட்டுமே வாக்கெடுத்தாக வேண்டிய நிலையில் உள்ள மக்கள் சபைக்கு, இப்படி ஒரு இயந்திரத்தை அமைக்க வேண்டியது அவசியந்தானா—அதற்காகப்போய் எட்டு இலட்சம் வரை செலவழிக்க முன்வருவது நியாயந்தானா என்பது பற்றி ஆராய்வோம்.

அன்னிய நாட்டுச் செலாவணி தேவை என்பதற்காக இங்குள்ள மக்கள் விரும்பிப் பயன்படுத்தக்கூடிய பல பொருட்களை இறக்குமதி செய்யக்கூடாது என இந்தியப் பேரரசு தடைவிதித்து வருகிறது. அதே நேரத்தில், ஏற்றுமதியைக் கூட்டுவதற்கான முயற்சியையும் தீவிரமாக மேற்கொண்டுவருகிறது. இதை அடிப்படையாகக் கொண்டு, வாக்கெடுக்கும் இயந்திர அமைப்புக்காக வெளிநாட்டுச் செலாவணியில் ரூபாய் எட்டு இலட்சத்திற்கு ஈடான செலாவணியைச் செலவிட இந்தியப் பேரரசு துணிந்து இருப்பதை நோக்குமிடத்து, அதைத் தண்டச் செலவு என்றுதான் எவரும் கூறுவர். அதிலும் அவசியமற்ற வீண் பகட்டுக்காகச் செலவழிக்கப்பட்ட தண்டச் செலவாகும் என்றே எவரும் கூறுவதுடன், அவ்வாறு பொறுப்பற்றத்தனமாக மக்கள் வரிப்பணத்தைப் பயனற்ற ஆடம்பரத்திற்காகச் செலவழிக்க முன்வந்துள்ள இந்தியப் பேரரசை வன்மையாகக் கண்டிக்கவும் செய்வர்.

'பசியை அடக்கிக்கொள்ளுங்கள்; பட்டினியாகக்கிடங்கள்; அதிக வரி கொடுங்கள்; சிறுசேமிப்பு ஏற்பாட்டில்இணைந்து அரசாங்கத்திற்குச் சிறு தொகையாவது கடனாகக் கொடுங்கள்' என்றெல்லாம் இந்தியப் பேரரசு மக்களிடம் கெஞ்சி வருகிறது—கொஞ்சி வருகிறது. ஆனால், மேற்குறிப்பிட்டுள்ள அர்த்தமற்ற ஆடம்பரத்திற்காக, இலட்சக்கணக்கான பணத்தைப் பாழாக்குவதில் இந்தியப் பேரரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது!

இந்த வாக்கெடுப்பு இயந்திரத்தை உருவாக்கி இந்தியாவிற்கு வந்து பொருள் ஈட்டியுள்ள மேற்கு ஜெர்மனியோ, தனது மக்கள் சபையில் அதுபோன்ற இயந்திரத்தை இன்னமும் அமைத்துக்கொள்ள முன்வரவில்லை. அதற்காகப் பணம் செலவழிக்க, தனது அரசாங்க வரவு-செலவுத் திட்டம் இடம் தருவதாக இல்லை என்று விளக்கம் தரப்படுகிறது.

இயந்திரத்தை உருவாக்கியுள்ள மேற்கு ஜெர்மனி, அந்த இயந்திரத்தைத் தனது மக்கள் சபையில் அமைத்துக்கொள்ள விரும்பவில்லை. அதற்கான பணம் தம்மிடம் இல்லை என்றும் வெளிப்படையாக அந்த அரசு ஒப்புக்கொள்ளுகிறது.

ஆனால் இந்தியப் பேரரசோ, அவசியமற்ற வீண் பகட்டிற்காக, வயிற்றையும் வாயையும் கட்டி மக்கள் சேர்த்துள்ள வெளிநாட்டுச் செலாவணியை இலட்சம் இலட்சமாகச் செலவிடத் துணிந்து நிற்கிறது!

இயந்திர நாகரிகத்திலேயே பிறந்து வளர்ந்துவரும் மேற்கு ஜெர்மனி, எதற்கும் இயந்திர வெறிகொண்டலையாமல் இருந்துவருகிறது! ஆனால், ஆத்மார்த்தம், கைராட்டை, கதர் எனப் பேசிவருகின்ற இந்தியப் பேரரசோ, இயந்திர பைத்தியம் பிடித்து அலைவதுடன், அவசியமற்ற இயந்திரங்களுக்காக இலட்சக்கணக்காகப் பணத்தைக் கொட்டியழவும் தயாராக இருந்து வருகிறது!

இது, இந்தியப் பேரரசின் காந்தீயப்பிடிப்பையோ சமதர்ம உணர்வையோ, சிக்கனத் தன்மையையோ பொறுப்புணர்ச்சியையோ வெளிப்படுத்துவதாக இல்லை. வீண் பகட்டிற்கு அடிமை அடகுவைத்துவிட்டு, மக்கள் வரிப்பணத்தைப் பாழடிக்கும் காங்கிரசு ஆளவந்தார்களின் ஊதாரித்தனத்தைத்தான், இந்தியப் பேரரசின் இப்போக்கு தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது.

சென்னையிலிருந்து 9 தேர்தல்ஆட்சேபனை மனுக்கள்!

புதுடில்லி, ஏப். 19—

நடைபெற்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஒருசிலரின் தேர்தல் முடிவுகள் சரியானதல்ல வென்றும், செல்லத் தக்கதல்ல வென்றும் இதுவரை மொத்தம் 105 ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாம்.

இதில் சென்னை மாநிலத்தில் மட்டும் மக்கள்சபை சம்பந்தமாக ஒரு வழக்கும் மனுவும் சட்டசபை சம்பந்தமாக 8 வழக்கு மனுக்களும் வந்துள்ளனவாம்.

சட்டசபைக்கான தேர்தல் வழக்குகள் கீழ்க்கண்ட தொகுதிகளுக்காகப் பதிவாகியுள்ளன:—

1. செஞ்சித் தொகுதி
2. உத்தமபாளையம் தொகுதி
3. சேலம் தொகுதி
4. மேட்டூர் தொகுதி
5. காரைக்குடி தொகுதி
6. திண்டிவனம் தொகுதி
7. சாத்தான்குளம் தொகுதி
8. போடிநாயகனூர் தொகுதி

உலக அமைதிக்கு!

ஜெயப்பிரகாஷ் நாரயணன் காட்டும் வழி என்ன?

ஜான்ஜார்பூர், ஏப். 19—

"உலக நாடுகள் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களை தயாரிக்கின்றன; இதனால் நெருக்கடிகள் பெருகி வருகின்றன.

"உலகத்திலுள்ள அரசியல் கட்சிகள் ஏற்படுத்தியுள்ள அரசாங்கம் எதுவும் பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை.

"சர்வோதய—பூதான இயக்கங்களின் கொள்கைகளைப் பின்பற்றுவதே உலக அமைதிக்குத் தக்கவழியாகும்.

"அதனால்தான், நான் அரசியலிலிருந்து மேலும் விலகிச் செல்லுகிறேன்" என்று, பொதுக் கூட்டமொன்றில் ஜெயபிரகாஷ் நாராயணன் கூறியிருக்கிறார்.

பம்பாய், ஏப். 19—

மில் துணிகள் மீது தற்போது உள்ள விகிதப்படியே 'எக்சைஸ்' வரி வசூலிக்கப்படும் என்றும் அவ்வரியை குறைப்பதற்கு சாத்தியமில்லை என்றும் மத்திய அமைச்சர் மொரார்ஜி தேசாய் கூறிவிட்டாராம்!

பொன்மலைப்பட்டியில் நிதி அளிப்பும்-பாராட்டும்

அண்ணா அவர்களின் தெளிவுரை

திருச்சி—பொன்மலைப்பட்டி தி. மு. கழகச் சார்பில் 15-4-57 மாலை 6-மணிக்கு, பொன்மலைத் திடலில் கழகத்திற்கு நிதி அளிப்பும்—தேர்தலில் வெற்றிபெற்ற **அண்ணா** அவர்களுக்கும் மற்ற தோழர்களுக்கும் பாராட்டுதலும் தெரிவிக்க மாபெரும் கூட்டம் ஒன்று தோழர் காமாட்சி தலைமையில் நடைபெற்றது.

டில்லிப் பாராளுமன்ற உறுப்பினராகிய தோழர் தருமலிங்கம் (திருவண்ணாமலை), சட்ட மன்ற உறுப்பினர்களான (கள்ளக்குறிச்சி) நடராசன், ஆனந்தன், சத்தியவாணிமுத்து, சந்தானம், மு. கருணாநிதி, அம்பில்-தருமலிங்கம், இரா. செழியன் ஆகியோர் பேசினர்.

அடுத்து, தோழர் பராங்குசம் அவர்கள் பொன்மலைக் கழகக் கட்டிட வகையில் நமது தி. மு. கழகத்திற்குக் கிடைத்த ரூ. 4,250 கொண்ட பண முடிப்பை அண்ணா அவர்களிடம் கொடுத்து, பொன்மலைக் கிளைக்குச் சொந்தமாகக் கட்டிடம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார்.

பின்னர் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில், தேர்தலில் கழகத்தின் வெற்றிக்குத் தொழிலாளர் தோழர்களும் துணையாயிருந்தார்களென்றும், வருங்காலத்தில் தொழிலாளர் தோழர்கள் பெரிதும் ஆதரவு தரவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இறுதியாக அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

"திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் அடைந்த வெற்றியினைக் குறித்து மாற்றுக் கட்சிகளும், மற்றும் பலரும் விமர்சனம் செய்து வருகின்றனர்.

"நாட்டுப் பிரிவினையைத் தி. மு. கழகம் கைவிட்டால் இன்னும் சில வெற்றிகளைத் தி. மு. கழகம் பெற்றிருக்க முடியும் என்றும் சிலர் கூறுகின்றனர். கம்யூனிஸ்டு கட்சியினரும், 'தி. மு. கழகத்தின் நாட்டுப் பிரிவினைக் கொள்கை தீதானது' என்று எப்போதும் போலவே இத்தேர்தலிலும் கூறினர்.

"அவ்விதம் கூறுபவர்கள் தெளிவு பெறும் சூழ்நிலை இன்று உருவாகி வருகிறது. அண்மையில் கேரளத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியினர் பெருமிதமான வெற்றி பெற்று மந்திரி சபையும் அமைத்துள்ளனர். இந்தப் புதியதோர் மாற்றத்தை தி. மு. கழகம் மனதார வரவேற்கிறது. கம்யூனிஸ்டுக் கட்சியினர் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி எவ்வாறு கருதிவந்தாலும், தி. மு. கழகம் முற்போக்குக் கட்சிகளின் எண்ணங்கள் ஈடேற வேண்டுமென்பதை மனதார விரும்புகிறது.

"கேரளத்தில் மந்திரி சபை அமைத்ததும் முதலமைச்சர், கேரளத்திலுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு உத்திரவு பிறப்பித்தார்.

"இதே வேண்டுகோளை முன்பு கேரளக் கம்யூனிஸ்டுகள் விடுத்தபோது, அதற்கு ஜனாதிபதி இசைவு தர மறுத்துவிட்டார். ஆனால் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் பலம் கிடைத்ததும் கம்யூனிஸ்டுக் கட்சியினர் கேரளத்திலுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்துள்ளனர்.

"இது மத்திய ஆட்சிப் பீடத்தினருக்கு கேரளக் கம்யூனிஸ்டுகள் விடுத்துள்ள பகிரங்கமான அறைகூவலாகும். ஆனால் டில்லி ஆட்சிப் பீடமோ, கேரள சர்க்காரின் இந்தப் போக்குக் கண்டிக்கத் தக்கதென்றும், பலாத்காரவாதிகளையெல்லாம் அரசியல் பேரால் விடுதலை செய்வதை அனுமதிக்க முடியாதென்றும் கூறுகிறது; 'இந்தப் போக்கு நீடித்தால் கேரளத்தில் கம்யூனிஸ்டு சர்க்கார் நிலைக்காது' என்று எச்சரிக்கை விடுத்துவருகின்றனர் காங்கிரஸ் தலைவர்கள்!

"கேரளத்திலுள்ள கம்யூனிஸ்டு தலைவர்களோ, மத்திய சர்க்கார் கேரளக் கம்யூனிஸ்டு மந்திரி சபைக்குக் கேடு விளைவித்தால் நாட்டில் இரத்தக்களறி ஏற்படும்—அமைதி குலைந்துவிடும்; எங்கள் மாநிலப் பிரச்சினையில் அத்துமீறி தலையிட்டால் நாங்கள் சும்மாயிருக்கமாட்டோம்' என்கின்றனர். மேலிடத்து காங்கிரஸ் தலைவர்கள் 'இதோபார்! உங்கள் மந்திரி சபை எத்தனை மாதகாலம் வாழ்கிறது பார்க்கலாம்' என்கின்றனர்;

"இதற்குப் பெயர்தான், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பது! 'எங்கள் மாநில உரிமைப் பிரச்சினையில் மற்றவர்கள்—அல்லது, மத்திய ஆட்சி என்ற பேரால் காங்கிரஸ் மேலிடம் தலையிடுவதை இனி அனுமதியோம்' என்ற உரிமை வேட்கைக்குப் பெயர்தான்—'திராவிட நாடு திராவிடருக்கே,' என்ற இதய கீதத்தின் அடிப்படைக் கருத்தாகும்! இதனை இன்று, கம்யூனிஸ்டுகள் கேரளத்தில் நடைமுறையில் காண்கின்றனர்.

"இதுபோன்ற சம்பவங்கள் இனி அடிக்கடி ஏற்படக்கூடும். அந்தச் சந்தர்ப்பங்களில் கம்யூனிஸ்டுகள் எங்களை அழைத்தாலும் அழைக்காவிட்டாலும், டில்லி ஆட்சிபீடத்தின் ஆணவத்தைத் தட்டிக்கேட்க தி. மு. கழகம், தோழமை உள்ளத்தோடு கம்யூனிஸ்டுகள் பக்கத்தில் நிற்கும்.

"ஏனெனில், எந்த ஒரு மாநிலமும் பிறமாநிலத்தை எதன் பேராலும் சுரண்டவோ அடக்கி ஆளவோ கூடாது. இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள எல்லா மாநிலங்களும் முழு உரிமை பெற்றுத் தோழமையுடன் இயங்க வேண்டுமென்பதே தி. மு. கழகத்தின் உறுதியான கொள்கையாகும். இதனை இதுவரை கேலி பேசிவந்த கம்யூனிஸ்டுகள் இனியாவது உணர்வார்கள் என்று நம்புகிறேன்; எதிர்காலம் இவ்வித சூழ்நிலையை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கிறேன்."

மேலும் அண்ணா அவர்கள் பேசுகையில் தி. மு. கழக சட்டசபைக் கட்சி ஆற்றவிருக்கும் பணியினையும் விளக்கி, வாக்காளர்களுக்கும் நிதி அளித்த பொன்மலை தி. மு. கழகத்திற்கும் நன்றி அறிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் அண்ணா அவர்களுக்கும் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், மற்றும் வெற்றிபெற்ற தோழர் மு. கருணாநிதி உள்ளிட்ட மற்ற உறுப்பினர்களுக்கும் கைத்தறி ஆடைகள், மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பெண் ஊழியர்களுக்கு விடுதி அமைக்கத்திட்டம்

ஐதராபாத், ஏப். 19—

ஆந்திர மாநிலத்திலுள்ள ஐதராபாத் நகரத்தில் பெண்கள் விடுதி ஒன்று அமைப்பதற்கு மத்திய சமூக நல நிறுவனம் ரூ. 15,000 மானியமாக அளித்திருக்கிறது.

இந்த விடுதியில் வேலைசெய்து வாழும் மாதர்களுக்கே இவ்வசதி செய்துதரப்படும்.

இதைத் தவிர பெண்கள், குழந்தைகள், ஊனமடைந்தோர் முன்னேறத்திற்காகவும் பாடுபடும் 22 நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ. 39,600 நடைமுறை ஆண்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

மாயூரத்தில் சிறப்புக் கூட்டம்

அண்ணா, என். வி. நடராசன் கலந்துகொண்டனர்

மாயூரம் தொகுதி தேர்தல் வழக்கு நிதிக்காக 15—4—57 காலை 11 மணிக்கு மாயூரம் சுந்தரம் தியேட்டரில், நகரத் தி. மு. கழகக் கிளை, சார்பு மன்றங்கள் ஆகியவைகள் சார்பில் ஓர் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் என். கிட்டப்பா முன்மொழிய, சவுந்தாராசன் வழிமொழிய, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தலைமை வகித்து பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் அடைந்துள்ள வெற்றியினையும், அதன் தன்மையையும் விளக்கிப் பேசியதோடு முதலமைச்சர் காமராசர் போன்றவர்கள் அதிகார பலத்தைக்கொண்டு ஜனநாயக வளர்ச்சிக்குப் பகிரங்கமாகக் கேடு செய்ததையும் சுட்டிக் காட்டினார்.

அடுத்து, தோழர் குடவாசல் கிருஷ்ணமூர்த்தி அவர்கள், மாயவரம் தொகுதியில் தமது அபேட்சாப் பத்திரத்தை தேர்தல் அதிகாரி புறக்கணித்ததையும், அதனை எதிர்த்து நீதி கோருவதற்காகப் பொதுமக்கள் பேராதரவு தரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

பின்னர் அண்ணா அவர்கள் விரிவுரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :—

"தி. மு. கழகம் தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற்றே ஆகவேண்டும்—இடங்களை அதிகம் பிடிப்பது ஒன்றுதான் அதற்குத் திட்டம் என்றிருந்தால் அதிகார பீடத்திலிருந்தவர்கள் கையாண்டதாகக் கூறப்படும் ஜனநாயகமற்ற போக்கில் தி.மு. கழகமும் இறங்கியிருக்கக்கூடும். ஆனால், தி. மு. கழகம் உயர்ந்த இலட்சியத்திற்காகப் பலவித கொடுமைகளையும், கஷ்டநஷ்டங்களையும் தாங்கிக்கொண்டு பணியாற்றி வரும் மகத்தானதோர் இயக்கமாகும். எனவேதான், கண்ணியம் — கட்டுப்பாடு — கடமை உணர்ச்சி ஆகியவைகளை முதன்மையாகக் கருதி தேர்தல் பணியில் கழகம் ஈடுபட்டது.

"தி. மு. கழகம் குறைந்த இடங்களையே கைப்பற்றியிருந்தாலும் அது பெற்றுள்ள வாக்குகள் தமிழகத்தின் அரசியலில் புதியதோர் மாற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. எதிர்காலத்தில் தி. மு. கழகம் தனது கொள்கையில் வலிவுடனும், பொலிவுடனும் விளங்கப் பொதுமக்கள் போராதரவு தருமாறு கோருகிறேன்.

"மாயூரம் தொகுதி வழக்கில் நமக்கு நீதி கிடைத்து, மறு தேர்தல் நடைபெறுமானால், வாக்காளர் பெருமக்கள் விழிப்புடன் இருந்து காங்கிரசின் சர்வாதிகாரப் போக்கிற்குத் தக்கதோர் படிப்பினையைப் புகட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

தலைவர் முடிவுரைக்குப் பின், தோழர் குடவாசல் கிருஷ்ணமூர்த்தி நன்றிகூற சிறப்புக் கூட்டம் பிற்பகல் 2 மணிக்கு முடிவுற்றது.

அண்ணா அவர்களுக்கும், தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கும் மாயூரம் நகரக் கிளை சுற்றுப்புறங்களிலுள்ள தி. மு. கழகக் கிளைகள், சார்பு மன்றங்கள், தொழிலாளர் சங்கங்கள் ஆகியவைகளின் சார்பில் ஏராளமான கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

நகைச்சுவை நடிகை தோழியர் அங்கமுத்து

பொன்னாடை போர்த்தப்பட்டு பாராட்டப்பட்டார்

சென்னை, ஏப். 20—

புகழ் பெற்ற நடிகை தோழியர் கே. எஸ். அங்கமுத்து அம்மையாருக்குப் பொன்னாடை போர்த்தி பாராட்டும் விழா, சென்னை - இராயப்பேட்டை இராசா கலை மன்றத்தாரால், சென்னை-சௌந்தரிய மகாலில் நடைபெற்றது.

தோழர் கே. எஸ். ஜி. ஹாஜா ஷெரீப் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், பின்னணி பாடகி தோழியர் எஸ். ஜே. ஆண்டாள் அவர்கள், தோழியர் அங்கமுத்துவுக்குப் பொன்னாடை போர்த்தினார்.

தோழர்கள் புலவர் தணிகை - உலகநாதன், நாடகாசிரியர் நடராச கவி, எம். எஸ். திருமலை, புலவர் இராம. சுப்பிரமணியம், புலவர் நடேசய்யர், சீனிவாசன், டி. வி. அனந்தராமன், கிருஷ்ணன், நரசிம்மன், கே. வி. சாமி, சுந்தர்ராஜ் ஆகியோர் பாராட்டும்-வாழ்த்தும் தெரிவித்துப் பேசினர்.

பின்னர், தோழியர் அங்கமுத்து, பாராட்டுதலுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

பல மன்றங்கள் சார்பில் வாழ்த்திதழ்களும் - மலர் மாலைகளும் அளிக்கப்பட்டதோடு, தோழியர் எஸ். ஜே. ஆண்டாள் நரசிம்மன் இன்னிசையும், குமாரிகள் சக்தி - இராசலட்சுமி - லீலா ஆகியோரின் நடன விருந்தும் நடைபெற்றது.

ஆசிரியர் பள்ளிகள் மாநில மாநாடு

ஒரு வேண்டுகோள்

"1957 மே திங்கள் முதற் கிழமையில் சென்னை மாநில ஆசிரியர் பள்ளிகளின் மாநாட்டை, சென்னையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருவதால், மாநில எல்லாத் திட்டக் குழு ஆசிரியர்களும் 'மாநில மாநாடு' நடத்தத் தங்கள் எண்ணங்களையும், தீர்மானங்களையும் 'பி. எம். சிவப்பிரகாசம், கன்வீனர், திட்டக் கமிஷன் ஆசிரியர்கள் மாநாடு, புதுப்பேரு கிராமம், மீஞ்சூர் அஞ்சல்; செங்கற்பட்டு மாவட்டம்,' என்ற முகவரிக்கு 25—4—57க்குள் வந்துசேரும்படி அனுப்பிவைப்பதோடு, தாலுகா ஒவ்வொன்றுக்கும் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அனுப்புமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

"தற்போது பல மாவட்டங்களில் ஆசிரியர் பயிற்சிக்கு அனுப்ப அரசாங்கமே உத்தரவு பிறப்பித்திருப்பதால், ஜூன் திங்களுக்குள் ஓராண்டு பயிற்சி பற்றிய முடிவை அரசியலாரிடமிருந்து பெற வேண்டியிருப்பதால் ஒவ்வொரு ஆசிரியரும் மாநாட்டில் கலந்துகொள்வதோடு, ஆசிரியர்களுக்குக் கட்டணமாகிய ரூ. 1-ம் தங்கள் கடமையாகக் கருதி இத்திங்கள் ஊதியத்திலேயே அனுப்புமாறு கோருகிறேன்" என்று கன்வீனர் பி. எம். சிவப்பிரகாசம் கோரியுள்ளார்.

தமிழில் ஊராட்சி சட்டம் பிரசுரமாகும்

சென்னை, ஏப். 19—

நகராட்சி சட்டப்படி சென்னை நகரசபை நடைபெற்று வருகிறது. இந்தச் சட்டம் ஆங்கிலத்தில் இருப்பதால் பொதுமக்கள் இதை நன்றாகப் புரிந்துகொள்ள முடிவதில்லை.

எனவே, நகராட்சி சட்டத்தை தமிழில் மொழி பெயர்த்து வெளியிடும் நற்பணியில் சென்னை நகர மன்ற ஆணையாளர் முனைந்துள்ளார்.

இதற்கு முன் நகரசபை வெளியிட்டுள்ள குறிப்பேட்டில், தமிழிலேயே நகரசபையின் நடவடிக்கைகள் விளக்கப்பட்டிருக்கிறது.

கிராம அபிவிருத்தித் திட்டங்கள்

பரிசீலனையில் இருக்கிறதாம்!

சேலம், ஏப். 18—

"இந்தியாவில் சென்னை, உத்திரப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களிலும் கிராம அபிவிருத்தித் திட்டங்கள், போக்குவரத்திற்காகப் பாதைகள் போடுதல் முதலியவைகளைச் செய்ய, விசேடத் திட்டங்கள் பரிசீலனையில் இருந்து வருகின்றன. இவற்றின் பரிசீலனை முடிந்தவுடன் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலேயே இவ்வேலைகள் நடைபெறலாம்."

இவ்வாறு, மத்தியசர்க்கார் திட்ட மந்திரி ஜி. எல். நந்தா டில்லி பாராளுமன்ற உறுப்பினர் தோழர் எஸ். வி. இராமசாமி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். (ந. - நி.)

சிறந்த கைத்தறி ரகங்களுக்குப் பரிசு!

சேலம், ஏப். 19—

சேலம், கோவை மாவட்டங்களில் தயாராகும் சிறந்த கைத்தறித் துணி ரகங்களுக்குப் பரிசுகள் வழங்க, கைத்தறித் துணிகள் கண்காட்சி ஒன்று சேலத்தில் மே 5-ந் தேதி முதல் 11-ந் தேதிவரை நடைபெறும்.

சேலம், கோவை ஆகிய இரு மாவட்டங்களிலுமுள்ள நெசவாளர்கள், 'மாஸ்டர்' நெசவாளர்கள் முதலியவர்களும், கூட்டுறவுச் சங்கங்களும் இந்த பரிசுப் போட்டியில் கலந்து கொள்ளலாம்; கட்டணம் எதுவுமில்லை.

போட்டிக்கான கைத்தறி ரகத் துணிகளை ஏப்ரல் 25-ந் தேதிக்குள் அனுப்பிவிடவேண்டும். சேலத்தில் கைத்தறி கண்காட்சி நடைபெறும் இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

8 பரிசுகள்

உயர்ந்த ரக வேட்டிகள், மத்திய ரக வேட்டிகள், உயர்ந்த ரக சேலைகள், மத்திய ரக சேலைகள், துண்டுகள், ஜமுக்காளங்கள், படுக்கை விரிப்புகள், சரிகைத் துண்டுகள் ஆகிய 8 ரகக் கைத்தறித் துணிகளில் சிறந்தவைகளுக்கு மொத்தம் 8 பரிசுகள் வழங்கப்படும். ரூ. 50 முதல் ரூ. 400 வரை பரிசுத் தொகைகள் வழங்கப்படும்.

சென்ற ஆண்டும் இம்மாதிரிக் கண்காட்சியை சேலத்தில் நடத்தி சிறந்த ரகங்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. இதற்கான செலவுகளுக்கு 'செஸ்' நிதியிலிருந்து செலவழிக்கப்படும். (ந. நி.)

இரட்டமலை சீனிவாசன் மாணவர் இல்லம்

"தாம்பரம், இரட்டமலை சீனிவாசன் மாணவர் இல்லத்தில் சேர்ந்து இலவச உணவும் உறைவிடமும் பெற்று உயர்நிலைக்கல்வி பயில விரும்பும் மாணவர்கள், 13 காசு அஞ்சல் உறையுடன் மே 31-க்குள் இல்லக்காப்பாளருக்கு மனுசெய்து கொள்ள வேண்டும்" என்று, கௌரவ இல்லக்காப்பாளர் சு. குமரேசன் அறிவிக்கிறார்.

சபாநாயகர் மாணவர் இல்லம்

மாணவர் சேர்தல்

"சபாநாயகர் சிவசண்முகம் பிள்ளை மாணவர் இல்லத்தில் உணவும் உறைவிடமும் பெற்று உயர்தரப்பள்ளிகளில் பயில விரும்பும் மாணவர்கள் மே 20-க்குள் 13 புதிய காசஅஞ்சல் உறையுடன் 'க. நாராயணசாமி செயலாளர் 78, ஜி. ஏ. ரோடு, சென்னை-21' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டுகிறோம்" என்று, கௌரவச் செயலாளர் க. நாராயணசாமி அறிவிக்கிறார்.

கழகச் செய்திகள்

கீழபாண்டவர்மங்கலம்

13-4-57 காலை 10 மணிக்கு, மேற்படியூர் கிளையின் நிருவாகக் கூட்டம், தோழர் இருளாண்டி இல்லத்தில் நடைபெற்றபோது, தோழர்கள் ஆர். வெள்ளைச்சாமி செயலாளராகவும், ஆர். மலையழகு துணைச் செயலாளராகவும், ஆர். இராமசாமி பொருளாளராகவும், அ. செல்லையா மாவட்டப் பிரதிநிதியாகவும் மற்றும் 12 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, 3 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மேட்டுப்பாளையம்

13-4-57-ல், மேற்படியூர் தி. மு. கழகச் சார்பில், பாக்குக்காரத் தெருவில் 'அண்ணா படிப்பகம்' திறக்கப்பட்டு ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் வி. சண்முகநாதன், சிற்றுளி—சுப்பிரமணியம், மு. இராமநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இவ்வூர் பிரமுகர் எம். எஸ். ரங்கசாமியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குன்னூர்

7—4—57-ல், நகர தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கோவை-மு. இராமநாதன் சொற்பொழிவும், கோவை-இளங்கவி குழுவினரின் இன்னிசையும் நடைபெற்றது.

கொடைக்கானல்—பாச்சலூர்

13-4-57 இவ்வூர் கிளை உறுப்பினர்கள் கூட்டம் தோழர் பா. குப்பண்ணன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் ம. பொ. சண்முகம் செயலாளராகவும், முத்துக்கூடை துணைச் செயலாளராகவும், பழனிச்சாமி பொருளாளராகவும், இராசன் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மெய்ஞானபுரம்

13-4-57-ல் மேற்படியூர் கிளை செயற்குழு தோழர் தங்கப்பழம் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் பெ. இருதயராசன் செயலாளராகவும், ஜி. டி. பாண்டியன் துணைச் செயலாளராகவும், பா. தேவதாஸ் பொருளாளராகவும், ஞா. தங்கப்பழம் மாவட்டப் பிரதிநிதியாகவும் மற்றும் 9 பேர் செயற் குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மதுக்கரை:

13—4—57 மாலை 5-மணிக்கு மேற்படியூர் கிளைத் துவக்கவிழாவும், கொடியேற்று விழாவும் முறையே தோழர்கள் கனக இரத்தினம், தங்கமாணிக்கம் ஆகியோரால் நடைபெற்றது.

அன்று இரவு 7-மணிக்கு பாலக்காடு பாதை—அய்யாவு திடலில் தோழர் தங்கமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் ம. ர. தமிழ்விழி, அழகரசு. சு. ஆறுமுகம் ஆகியோர் பேசினர்.

14—4—57 காலையிலிருந்து மாலைவரை, வெற்றிபெற்றக் கழகத் தோழர்களைப் பாராட்டி, குனியமுத்தூர் தோழர் கே. ஆர். சண்முகம் அன்பளிப்பாகத் தந்த மஞ்சளை, தோழர்கள் ஒவ்வொரு ஏழை வீட்டிற்கும் அன்பளிப்பாகத் தந்தார்கள்.

இரவு 7-30 மணிக்கு தோழர் எம். கருப்பண்ணன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சு. கு. தாண்டவன், மா. இராமசாமி, தங்கமாணிக்கம், ச. ஆறுமுகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சேலம்—தாரமங்கலம்

14—4—57 மாலை 6 மணிக்கு, தாரமங்கலம் தி. மு. கழகப் பணிமனை திறப்பு விழா, தோழர் இரா. மாரப்பன் தலைமையில் நடைபெற்றபோது, ஊராட்சி மன்றத் தலைவர் தோழர் பி. வி. செல்லப்ப(முதலியார்) திறந்து வைத்து சொற்பொழிவாற்றினார். இறுதியில் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டு விழா முடிவுற்றது.

சென்னை — பார்க்டவுன் இளைஞர் முத்தமிழ் மன்றத் துவக்க விழா

8—4—57 மாலை 7½ மணிக்கு, 2/2 நைனியப்ப நாய்க்கன் தெருவில் மேற்படி மன்றத் துவக்க விழா தோழர் ந. செயராமன் தலைமையில், தோழர் கோ. செங்குட்டுவன் துவக்கிவைத்தார். தோழர்கள் கே. டி. அரசு, பாலன், கோதண்டபாணி, சி. தியாகராசன், நடராசன், குட்டியப்பன், ஜி. என். சாமி, கே. எம். மணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னைக்கு 800!

சென்னை, ஏப். 19—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், கோழி வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட உதவித் திட்டத்தின்கீழ் அமெரிக்காவிலிருந்து 30,000 உயர்ந்த ரகக் கோழிக் குஞ்சுகள் விமானத்தின் மூலம் டில்லிக்கு அனுப்பப்பட்டதாம். அந்த விமானம் டில்லிக்கு வந்து சேர 50 மணி நேரம் பிடித்ததாம்.

டில்லியிலுள்ள அரசாங்கக் கோழிப் பண்ணையில் அவைகளைப் பாதுகாத்து வளர்த்தபின் எல்லா மாநிலங்களுக்கும் அவைகள் அனுப்பப்பட்டதில் சென்னை மாநிலத்திற்கு 800 கோழிக் குஞ்சுகள் கிடைத்திருக்கிறதாம்!

வாக்குக் கணக்கிடும் புதிய கருவி!

பாராளுமன்றத்தில் அமைக்கப்படும்

புதுடில்லி, ஏப். 19—

இந்தியப் பாராளு மன்றத்தில் உறுப்பினர்கள், வாக்குப் பதிவு செய்ய இனி எழுந்து செல்லவோ, அதிகக் கஷ்டப்படவோ தேவையில்லையாம்!

அவர்கள் அமர்ந்துள்ள இடத்திற்கு எதிரிலுள்ள மேசையின் பலகையில் பொருத்தப்பட்ட கருவியிலுள்ள மூன்று குமிழ்கள் மூலம் வாக்குப் பதிவு செய்யலாமாம்!

ஆதரிப்பதாயின் ஒரு குமிழ்; எதிர்ப்பதாயின் மற்றொரு குமிழ்; நடுநிலைமை வகிப்பதாயின் மூன்றாவது குமிழ்—என்ற முறையில் வாக்குகளைப் பதிவு செய்கையில் அதனைக் கையாளலாமாம்.

இந்த ஏற்பாட்டிற்கு ரூ. 4 - இலட்சம் மொத்தம் செலவிடப்பட்டுள்ளதாம்.

இந்த நவீன வாக்குக் கணக்கெடுப்புக் கருவியின் மூலம் காலத்தையும், உழைப்பையும் வீணாக்காது தடுக்க முடிகிறது என்றும் கூறப்படுகிறது.

இந்த ஏற்பாடு ஏற்கனவே மேற்கு வங்க சட்டசபையில் இருக்கிறதாம்.

முகவரி மாற்றங்கள்

மாணவி எஸ். பி. சற்குணம்
எண் 1, லாயர் சின்னத்தம்பி முதலி 1-வது தெரு
சென்னை-21-

* * *

இரா. திருமாறவன்
செயலாளர், தி. மு. க.
யாழ்ப்பாணக் கிளை
எண் 62, மேல்மாடி
பெரியகடைவீதி
யாழ்ப்பாணம், இலங்கை.

ஊழியர்கள் உரிமைகளைப் பறிக்கும் அவசரச் சட்டத்திற்குக் கண்டனம்

செல்லாத சட்டங்களையும் செல்லுபடியாகச் செய்வதற்கா இந்த நிலைமை?

மேலதிகாரிகளின் திறமையின்மையை தெளிவாக எடுத்துக் காட்டுகிறதே!

சங்கப் பொதுச்செயலாளர் குரலெழுப்புகிறார்

புதுடில்லி, எப். 22—

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஊழியர்களின் ஊதியங்களை மட்டுமன்றி வேலை நிலைமைகளையும் மாற்றுவதற்கு மத்திய சர்க்காருக்கு அதிகாரம் வழங்கும் ஒரு அவசரச் சட்டத்தை 20-ந் தேதியன்று இந்தியக் குடியரசுத் தலைவர் பிறப்பித்துள்ளார்.

இதன் மூலம், 1956-ம் வருட ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் சட்டத்தின் 11-வது பிரிவு திருத்தப்படுகிறது.

சமீபத்தில் பம்பாய் உயர்நீதி மன்றத்தில் நடைபெற்ற வழக்கொன்றில், ஊழியர்கள் சம்பளத்தை மாற்றுவதைத் தவிர வேறு எந்த அதிகாரமும் மத்திய அரசாங்கத்திற்குக் கிடையாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த நிலைமையில், ஊதியத்தை மட்டுமன்றி வேலையைப் பற்றிய இதர நிபந்தனைகளை மாற்றவும் அதிகாரங்கள் வழங்கும் வகையில் இந்த அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

★

'அவசரச் சட்டம் — தவறான கொள்கை'

பம்பாய், எப். 22—

'நீதிமன்றத் தீர்ப்பைத் தட்டிக் கழிப்பதற்காக மத்திய சர்க்கார், அவசரச் சட்டங்கள் பிறப்பிப்பதென்பது தவறான கொள்கையாகும்' என்று, அ. இ. இன்ஷ்யூரன்ஸ் சங்கத் தலைவர் கூறியுள்ளார்.

★

சங்க பொதுச்செயலாளர் கண்டனக் குரல்

பம்பாய், எப். 22—

"செல்லாத இன்ஷ்யூரன்ஸ் நிறுவனச் சட்டங்களை செல்லுபடியாகச் செய்து இந்தியக் குடியரசுத் தலைவர் பிறப்பித்துள்ள அவசர சட்டம், ஊழியர்களின் உரிமைகளை நேரடியாகப் பறிப்பதாகும்; மேலும், பாராளுமன்றத்திணல் பாதுகாக்கப்பட்டுள்ள அவர்களுடைய வேலை நிலையை அவர்கள் அனுபவிக்க முடியாதபடி இந்த அவசரச் சட்டம் செய்துள்ளது"

என்று, அகில இந்திய ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் ஊழியர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் குரல் எழுப்பியுள்ளார்.

இந்த அவசரச் சட்டத்தை சம்மேளனம் ஆராய்ந்து வருவதாகவும், இது சம்பந்தமாக சம்மேளனம் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

"இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் மேலதிகாரிகள் நிர்வாகம் செய்ய இயலாதவர்களாய் இருப்பதைத்தான் இந்த அவசரச் சட்டம் எடுத்துக் காட்டுகிறது,"

என்றும், அவர் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

3000 தொழிலாளர்கள்

உள்ளிருப்பு வேலைநிறுத்தம்?

ஐதராபாத், எப். 22—

இம்மாதம் 24-ந் தேதி தேதியிலிருந்து சங்கர் நகரிலுள்ள நிசாம் சர்க்கரைத் தொழிற்சாலையைச் சேர்ந்த 3,000-த்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளனராம்!

அரசாங்க ஊழியர்களுக்கு ஊதிய நிர்ணயக் குழு

அமைச்சர் தகவல்

திருச்சி, எப். 22—

கேரள மாநிலத்தில் அரசாங்க ஊழியர்களின் ஊதியத்தை மாற்றியமைக்க, ஒரு ஊதிய நிர்ணயக் குழு நியமிக்கப்படும் என்று நிதி அமைச்சர் அச்சுத மேனன் கூறியுள்ளார்.

போனஸ் பிரச்சினையில் முடிவு காண!

கேரள தோட்டத் தொழிலாளர்கள் கிளர்ச்சிசெய்ய முயற்சி

எர்ணாகுளம், எப். 22—

கேரள மாநிலம் காப்பி, டீ, இரப்பர் தொழிலுக்குச் சிறப்புப் பெற்றதாகும். இந்தத் தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் சுமார் இரண்டு இலட்சம் பேர் 1955-56-ம் ஆண்டுக்கான வெகுமதி (போனஸ்) முதலிய கோரிக்கைகளை இடைவிடாது வற்புறுத்தி வந்துள்ளனர்.

சமீபத்தில் கேரள அரசாங்கம் நியமித்த தோட்டத் தொழில் குழுவின் முயற்சியும் இப்பிரச்சினையில் பயனளிக்கவில்லை.

'போனஸ் வழங்கும் விஷயமாக தோட்ட முதலாளிகளுக்கும்—தொழிலாளர் சங்கங்களுக்கும் உடன்பாடு ஏற்படவில்லை; தோட்டமுதலாளிகள் 'போனஸ்' வழங்க மறுத்து விட்டனராம்!

எனவே தோட்டத் தொழில் சம்பந்தப்பட்ட பல்வேறு தொழிற் சங்கப் பிரதிநிதிகள் கூடி, 1955-56ம் ஆண்டுக்கான 'போனஸ்' உட்பட மற்ற கோரிக்கைகளையும் தோட்ட முதலாளிகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென வற்புறுத்தியும், மூன்று வார காலத்திற்குள் இது பற்றி முடிவு தெரியவேண்டுமென்றும் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள மறுத்தால் நாடு முழுமையிலும் உள்ள இரண்டு இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதென்றும் முடிவு செய்துள்ளனர்.

தோட்டத் தொழிலாளர் சங்கங்களின் செயற்குழு, இந்திய தேசியத் தொழிற் சங்கத்துடன் கலந்து வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக நடத்த தக்க நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

நிலவுடைமைக்கு அதிகபட்ச வரம்பு

கம்யூனிஸ்டுகளின் கோரிக்கைக்கு காங்கிரஸ் முதலமைச்சர் இணக்கம்

கட்டாக், எப். 20—

முன்னாள் மன்னர்களின் நிலங்கள் உட்பட எல்லா நிலங்களின் உடைமைக்கும் அதிகபட்ச வரம்பு அவசியம் நிர்ணயிக்க வேண்டும் என்ற முக்கியமானதோர் பகுதி அடங்கிய ஒரிசா கம்யூனிஸ்டுக் கட்சியின் கோரிக்கைகளை மாநிலக் காங்கிரஸ் முதலமைசசர் ஒப்புக்கொண்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

ஒரிசா சட்டசபையில் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர்கள் 9 பேர் என்பதும், ஆனல் அரசாங்கம் நிலைக்க இவர்களின் உதவி தேவைப்படுகிறது என்பதும் நினைவு கூறத்தக்கதாகும்.

கொடுத்த வாக்குறுதியை மீறினர்!

500 தாய்மார்கள் உள்ளிட்ட 1,500 பேர் வேலையினின்றும் நீக்கப்படுவார்களாம்

கட்டாக், எப். 22—

ரூர்கேலா எஃகு உற்பத்தித் திட்டத்தின்கீழ் உழைத்து ஊதியம் பெற்று வாழ்க்கை நடத்திய 1,500 தொழிலாளர்கள் ஏப்ரல் 23-ந் தேதியிலிருந்து வேலையினின்றும் நீக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளார்களாம்! இவர்களில் 500 பேர் தாய்மார்களாம்!

இது பற்றி வெளிவந்துள்ள செய்தி ஒன்றில், 'திட்டத்தின்கீழ் வேலை இன்னும் இருப்பதால் இது ஆட்குறைப்பு நடவடிக்கை என்று கருதுவதற்கில்லை,' என்று பன்கா பேசாரிதாஸ் என்பவர் கண்டித்துள்ளதாக குறிப்பிட்டிருக்கிறது.

திட்ட நிர்மாணத்திற்காக நில ஆர்ஜிதம் செய்தபோது அங்கு குடியுள்ள மக்களுக்கு திட்ட நிர்மாண வேலையில் முதல் சலுகை தரப்படும் என்று நம்பிக்கையூட்டப்பட்டதாம்!

இம்ரே நாகியின் கதி என்ன?

தூக்கிலிட்டுக் கொல்லும் நிலைமை உருவாகிறது?

நியூயார்க், எப். 22—

தற்போது நியூயார்க் நகரத்தில் இருக்கும் ஆங்கேரிய தேசியத் தலைவி அன்றுஜெகத்தில் என்பவர் லண்டன் புறப்படுவதற்குமுன் நிருபர்களிடம், அங்கேரியின் முன்னாள் முதலமைச்சர் இம்ரே நாகி மீது வழக்குத் தொடர்ந்து, விசாரணை நடத்தி உண்மைகளை வெளிப்படுத்தச் செய்து, இறுதியில் அவரைத் தூக்கிலிட்டுக் கொல்லும் நிலைமை உருவாகி வருவதாகக் கூறியுள்ளார்.

வேலையற்ற 40,000 பேர்

வேதனையுற்ற முந்திரித் தொழில்

சீரழிவுக்குப்பின் சிறிது தலைதூக்குகிறது

கொய்லான், எப். 22—

கொய்லான் பகுதியில் சுமார் 100 தொழிற்சாலைகள் முந்திரித் தொழிலில் ஈடுபட்டுள்ளன. கடந்த ஆண்டு ஆகஸ்டு திங்களில் போதிய முந்திரி வித்துக்கள் கிடைக்காததால்; தொழிற்சாலைகள் மூடப்பட்டதாம். சுமார் 40,000 தொழிலாளர்கள் வேலை இழந்து வேதனைப்பட்டனராம்!

சென்ற வாரம் 26 தொழிற்சாலைகள் மீண்டும் வேலையைத் துவங்கியுள்ளதாம்.

ஆப்பிரிக்காவில் முந்திரி விளைச்சல் முன்னேற்றமடைந்துள்ளதால் நடைமுறை ஆண்டில் 40,000 டன் முந்திரி வித்துக்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள என்றும், மே மாதம் முதல் நம் நாட்டு முந்திரி வித்துக்கள், நாட்டின் தேவைக்குப் போதிய அளவு கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதி

★

பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் சேலம் தொகுதித் தேர்தல் வழக்கைச் சிறந்த வழக்கறிஞர்களைக்கொண்டு திறம்பட நடத்தவேண்டிக் கீழ்க் கண்ட வகையில் அன்புடன் வழக்கு நிதி தந்துள்ளார்கள்:—

		ரூ.	காசு
முன் வரவு	...	586	31
இரா. கோவிந்தன், பசுவபாளையம்	...	1	00
சி. பெ. குருசாமி, சிவகாசி	...	2	00
இளங்கோ மன்றம், மதுரை	...	4	44
கலைக்கழகம், திருவள்ளூர்	...	2	00
செல்வி விமலா, மதுரை	...	10	00
செல்வி வனிதா ,,	...	10	00
திருப்பூர் தி. மு. க. பொதுக்கூட்டத்தில்	...	23	09
குளித்தலை ,,	...	75	62
கோமாக்குடி ,,	...	8	02
சாத்தமங்கலம் ,,	...	2	41
திருமங்கலம் ,,	...	1	19
தி. மு. கழகம், நகர்	...	10	15
மாணிக்கம், ஆனந்தமேடு	...	10	00
தி. மு. க. அனுதாபிகள், ஆக்ரா	...	15	00
ஆக மொத்தம்	...	761	23

நிதி அனுப்பிவைக்கவேண்டிய முகவரி:

இரா. நெடுஞ்செழியன்—26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1

சென்னை சாலைகளுக்கு உதவி

மாவட்டவாரியாக விவரம்

சென்னை, எப். 22—

மத்திய சாலை நிறுவனத்திலிருந்து ரூ. 7,89,000 சென்னை அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகை மாவட்டவாரியாக ஒதுக்கப்பட்டுள்ள விவரம் வருமாறு:—

தென் ஆற்காடு	ரூ. 1,32,000
திருச்சி	ரூ. 36,000
மதுரை	ரூ. 85,000
செங்கற்பட்டு	ரூ. 52,000
நெல்லை	ரூ. 1,77,000
சேலம்	ரூ. 1,28,000
தஞ்சை	ரூ. 1,79,000

வாயு மண்டலத்தில்!

கதிரியக்கநிலையை அறிய ராக்கெட் குண்டுகள்

சான்பிரான்சிஸ்கோ, எப். 19—

அமெரிக்கக் கடற்படை ஒரு விசேட ராக்கெட் குண்டைத் தயாரித்துள்ளதாம்.

பூமிக்குமேல் 35 மைல் தூரத்தில் வாயு மண்டலத்தில் கதிரியக்கம் எந்த அளவிற்குப் பரவியுள்ளது என்பதை இந்த அற்புத ஆயுதம் ஆராயும் சக்தியைப் பெற்றுள்ளதாம்.

இந்த ராக்கெட்டில் வானொலி இயந்திரம் அமைக்கப்பட்டிருப்பதால், பூமியிலிருந்துக்கொண்டே விண்ணில் உள்ள கதிரியக்க நிலையை அறிந்துகொள்ள முடியுமாம்.

சமமாகப் பஞ்சப்படி அளிக்க உத்தரவு

சென்னை, எப். 22—

தற்போது உதவி ஊதியம் பெறுபவர்களுக்கு ரூ. 4 முதல் ரூ. 6 வரை பஞ்சப்படி தரப்படுகிறது.

இனி எல்லோருக்கும் சமமாக ரூ. 6 பஞ்சப்படியாகத் தரப்பட வேண்டும் என்று சென்னை அரசாங்கம் உத்திரவு பிறப்பித்திருக்கிறது.

'தூக்குமேடை'

23—4—57 இரவு 9-மணிக்கு நாமக்கல் வட்டம் பெரியப்பட்டி பள்ளியின் அருகில், நாவலர் இரா. நெடுஞ்செழியன் அரங்கில், முத்தமிழ் நாடக மன்றத்தாரால் தோழர் மு. கருணநிதி எழுதிய 'தூக்குமேடை' நாடகம் நடைபெறும்.

கழகக் கூட்டங்கள்

★

ஒரத்தநாட்டேப்பேட்டை:

23—4—57 மாலை 6-மணிக்கு தி. மு. கழக படிப்பகத் திறப்புவிழா

தலைவர்: சுந்தரேசன்

திறப்புவிழா: செ. ஏ. பலராமன்

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

தி. ந. சம்பந்தம்

ஜே. ஏ. வகாப்

★

கூநூர்—நடந்தை:

23—4—57 மாலை 7-மணிக்கு தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர்: எம். பழனிசாமி

பேசுவோர்:

கி. மனோகரன்

என். இரத்தினம்

★

பெரியநூர்:

24—4—57 மாலை 7 மணிக்கு தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர்: பி. எஸ். இராசன்

பேசுவோர்:

என். எஸ். இளங்கோ

கு. அடைக்கலம்

கலாநேசன்

(மருங்கப்பள்ளம் ஏ. கருப்பையா இயக்கப் பண் பாடுவார்.)

★

உத்திரமேரூர்:

பஸ் நிலையத் திடல்

24—4—57 மாலை 5-மணிக்கு

தலைவர்:

காஞ்சி-ஏ. கே. தங்கவேலர்

பேசுவோர்:

அன்று

சத்தியவாணிமுத்து

ஜி. பி. அமுதா

ஜே. ஏ. வகாப்

இரங்கற் கூட்டம்

24—4—57 மாலை 6-மணிக்கு சென்னை 12-வது வட்டம், 28. வரதராச முதலி தெரு 'ஆர்பார் டேனமெண்ட்ஸ்' எனும் இடத்தில், தோழர் பி. பாலையா அவர்களின் செல்வன் மறைவு குறித்து தோழர் சி. தருமலிங்கம் தலைமையில் ஓர் இரங்கற் கூட்டம் நடைபெறும்; அதுபோது தோழர்கள் என். ஜீவரத்தினம், இரகுநாதன், தமிழழகன் முதலியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம்; சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.